## 10th Social Science Lesson 22 Questions in Tamil - பொருளியல்

### 4] அரசாங்கமும் வரிகளும்

1) அரசின் வருமானம் கீழ்க்கண்டவற்றுள் எதனைச் சார்ந்து உள்ளது?

a) நேர்முக வரி

b) மறைமுக வரி

c) a) மற்றும் b)

d) தலா வருமானம்

2) இந்தியாவில் எத்தனை நிலையிலான அரசாங்கங்கள் மக்கள் மற்றும் சமூகத்தின் நலனுக்காக பல்வேறு செயல்பாடுகளைச் செய்து வருகின்றன?

a) மூன்று

b) இரண்டு

c) நான்கு

d) ஐந்து

3) பாதுகாப்புப் படைகளை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் பொறுப்பான அரசாங்கம் எது?

a) மத்திய அரசாங்கம்

b) மாநில அரசாங்கம்

c) மாவட்ட நிர்வாகம்

d) ஐக்கிய நாடுகள் சபை

4) நாம் நல்ல பொருளாதார உறவினை பராமரிக்க ஏதுவாக அமைவது?

a) ஏற்றுமதி

b) இறக்குமதி

c) மூலதனம் மற்றும் உழைப்பு

d) மேற்கண்ட அனைத்தும்

5) உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்துவது எது?

a) மத்திய அரசு

b) மாநில அரசு

c) மாவட்ட அமைப்பு

d) பஞ்சாயத்து அமைப்பு

6) அந்தந்த மாநிலங்களில் காவல் துறையை நிர்வகிக்கும் பொறுப்பு யாருடையது?

a) மத்திய அரசு

b) மாநில அரசு

c) ஆட்சித்துறை

d) சட்டத்துறை

7) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) பொது நிர்வாகம் மற்றும் பொதுப்பண்டங்களை வழங்குதல்: அரசாங்கம் பொதுவாக பல்வேறு துறைகள் மூலம் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் நிர்வகிக்கிறது.

ii ) வருவாய் துறை, பள்ளிகள், மருத்துவமனைகள், கிராம வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி போன்றவைகள் எடுத்துக்காட்டுகளாகும்.

iii ) மத்திய மற்றும் மாநில அரசாங்கத் துறைகளின் அதிகாரவரம்புகளின் பட்டியல் பொதுத் தளத்தில் கிடைக்கிறது.

iv ) உள்ளூர் அரசாங்கங்கள், உள்ளூர் சாலைகள், வடிகால், குடிநீர், குப்பை சேகரிப்பு மற்றும் அகற்றல் போன்ற பொதுப்பண்டங்களை வழங்குகின்றன.

a) i ), ii ), iii ), iv )

b) i ), ii ), iii )

c) ii ), iii )

d) iii ), iv )

8) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) அதிக வருமானம் உடையவர்கள் ஏழைகளை விட அரசாங்கத்திற்கு அதிகவரி செலுத்தக்கூடிய வகையில் வரி வசூலிக்கப்படுகிறது.

ii ) சில அடிப்படைத் தேவைகளான உணவு, தங்குமிடம், உடை, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மாத வருமானம் போன்றவற்றினை ஏழைகளுக்கு வழங்குவதற்காக அரசாங்கம் பணத்தைச் செலவிடுகின்றது.

iii ) அரசு வரிகளை வசூலிப்பது மற்றும் ஏழைகளுக்கான செலவினைச் செய்வது, அரசு எவ்வாறு வருமானத்தை மறுபகிர்வு செய்கிறது மற்றும் வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றினை செயல்படுத்துகிறது

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

9) கீழ்க்கண்ட எந்த முகவர்கள் மூலமாக மத்திய அரசு பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறது?

i ) இந்திய பங்குமற்றும் பரிவர்த்தனைவாரியம்

ii ) இந்திய போட்டி ஆணையம்

iii ) இந்திய வர்த்தக நிறுவனம்

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

10) கீழ்க்கண்டவற்றுள் வரி என்ற சொல்லின் பொருள் எது?

a) மதிப்பீடு

b) வரி செலுத்துதல்

c) கட்டணம்

d) அளிப்பு

11) வரிவிதிப்பு முறை பின்வரும் எந்த கருத்தை மையமாகக் கொண்டு செயல்படுகிறது?

a) பொருளாதார நலன்

b) மக்கள் நலன்

c) அரசு முன்னேற்றம்

d) லாபம் ஈட்டுதல்

12) "வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துகையாகும்" என்று கூறியவர்?

a) ஆடம்ஸ்மித்

b) அமர்த்தியாசென்

c) கீன்ஸ்

d) செலிக்மேன்

13) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) வரி விதிப்பு என்பது அரசுக்கு நிதியளிப்பதற்காக வருவாயை உயர்த்துவதையோ அல்லது தேவையை பாதிக்கும் பொருட்டு விலைகளை மாற்றாமல் இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ii ) வரலாற்று காலத்திலிருந்தே நாடுகளும் அதற்கு இணையாக செயல்படும் அரசுகளும் வரிவிதிப்பின் மூலம் பெற்ற நிதியிலிருந்தே பல செயல்களை நிறைவேற்றியிருக்கின்றது.

iii ) அவைகளில் சில பொருளாதார உள்கட்டமைப்புச் செலவுகள், இராணுவம், அறிவியல் ஆராய்ச்சி, கலாச்சாரம், கலைகள், பொதுப்பணிகள், பொதுக் காப்பீடுகள் மற்றும் அரசாங்க செயல்பாடுகள் போன்றவைகளாகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

14) வரிகளை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் திறன் எவ்வாறு கூறப்படுகிறது?

a) நிதித் திறன்

b) வரித்திறன்

c) பொருளாதாரத்திறன்

d) உற்பத்தித்திறன்

15) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) செலவு, வரி வருவாயை விட குறைவாக இருக்கும்போது ஒரு அரசாங்கம் கடனை திரட்டுகிறது.

ii ) வரிகளின் ஒரு பகுதி கடந்த காலப் பணிகளுக்கான கடன்களுக்குப் பயன்படுத்தப்படலாம்

iii ) அரசாங்கம் மக்களின் நலனிற்கும் பொது சேவைகளுக்கும் வரிகளைப் பயன்படுத்தினர்.

iv ) இந்த சேவைகளில் கல்வி முறைகள், முதியோருக்கான ஓய்வூதியம், வேலையின்மை சலுகைகள் மற்றும் பொது போக்குவரத்து ஆகியவை அடங்கும்

a) i ), ii ), iii ), iv )

b) i ), ii ), iii )

c) ii ), iii ), iv )

d) iii ), iv )

16) வரி முறையை வடிவமைப்பதில் முதன்மையானது எது?

a) சமத்துவம்

b) வருமானம்

c) கல்வி

d) உற்பத்தி

17) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) ஒவ்வொரு வரி செலுத்துவோரும் ஒரு வருடத்தில் எவ்வளவு வரித்தொகையை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்பதைக் கணக்கிட ஒவ்வொரு அரசாங்கமும் வரி முறையை முன் கூட்டியே அறிவிக்க வேண்டும்.

ii ) அரசாங்கம் வரி முறையை அடிக்கடி மாற்றக்கூடாது மற்றும் வரி அமைப்பில் திடீர் மாற்றங்களை அறிவிக்கக் கூடாது.

a) i ), ii )

b) i ) மட்டும்

c) ii ) மட்டும்

d) இரண்டுமில்லை

18) ஒரு நபருக்கு வரி செலுத்தப் போதுமான பணம் கிடைக்கும் நேரத்தில் வரி வசூலிக்கப்பட்டால் அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a) சிக்கன விதி

b) வசதி வரி

c) உறுதி விதி

d) சமத்துவ விதி

19) நிறைய வரிகளுக்குப் பதிலாக அதிக வரி அதிக வருவாயைப் பெறக் கூடிய சில வரிகளைத் தேர்வு செய்யும் வரிமுறை எது?

a) சிக்கன விதி

b) உற்பத்தி வரி

c) உறுதி விதி

d) நெகிழ்ச்சி வரி

20) மக்கள் வருமானம் அதிகரித்தால் தானாகவே அதிக வரி வருவாயை செலுத்தும் வகையில் வரி அமைப்பு வடிவமைக்கப்படுதல் எவ்வகை வரியாகும்?

a) சிக்கன விதி

b) உற்பத்தி வரி

c) உறுதி விதி

d) நெகிழ்ச்சி வரி

21) கீழ்க்கண்டவற்றுள் வரிவிதிப்பின் நோக்கம் எவை?

i ) நாணயத்தின் நிலைத்த தன்மையைப் பேணுதல்

ii ) செல்வத்தைப் பகிர்வது தொடர்பான பொதுக் கொள்கையை வெளிப்படுத்துவது

iii ) சில தொழில்கள் அல்லது நெடுஞ்சாலைகள் அல்லது சமூகப் பாதுகாப்பு போன்ற சில பயன்களின் செலவுகளைத் தனிமைப்படுத்துதல்

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) iii ) மட்டும்

22) நேர்முக வரி என்பது " யார் மீது வரி விதிக்கப்பட்டதோ அவரே அவ்வரியை செலுத்துவதாகும். வரி செலுத்துபவரே வரிச்சுமையை ஏற்க வேண்டும்" என்று கூறியவர் யார்?

a) ஸ்லீமன்

b) கீன்ஸ்

c) ஜே.எஸ்.மில்லின்

d) வி.கே.ஆர்.வி. ராவ்

23) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) வருமான வரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரி முறையில் மிக முக்கியமான வரியாகும்.

ii ) இவ்வரி தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது.

iii ) இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக்கூடியதாகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) iii ) மட்டும்

24) இந்தியாவில் முதன் முதலாக வருமானவரி 1860ஆம் ஆண்டு யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?

a) ஸ்லீமன்

b) கீன்ஸ்

c) ஜே.எஸ்.மில்லின்

d) சர் ஜேம்ஸ் வில்சன்

25) இந்தியாவில் அரசாங்கத்தினால் எத்தனை அடுக்குகளில் வரி வசூலிக்கப்படுகிறது?

a) மூன்று

b) நான்கு

c) இரண்டு

d) ஐந்து

26) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) இந்தியாவில் மறைமுக வரி களை விட நேரடி வரி மூலம் அதிக வரி வருவாயை வசூலிக்கின்றோம்.

ii ) இந்தியாவின் முக்கிய மறைமுக வரி சுங்க வரி மற்றும் GST ஆகும்.



winmeen.com

iii) பணக்கார நுகர்வோர் ஏழைகளை விட அதிக வரி செலுத்தும் வகையில் அரசாங்கங்கள் வடிவமைக்க முயற்சிக்கின்றன.

iv) இருப்பினும் ஏழைகள் இன்னும் இந்த வரிகளின் மூலம் அதிக பணம் செலுத்துகிறார்கள்.

a) i ), ii ), iii ), iv )

b) i ), ii ), iii )

c) ii ), iii ), iv )

d) iii ), iv )

27) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தில் வருடத்திற்கு இரு முறை வரி முறையை அறிவிக்கிறோம்

ii ) ஆண்டு நடுப்பகுதியில் வரி மாற்றங்களை அறிவிப்பதன் மூலம் இது மிகவும் அரிதாகவே மீறப்படுகிறது

iii) இந்திய வரி முறை எல்லாவற்றையும் விட உறுதியான நியதியை கடைபிடிக்கிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii ),

28) மூலதன சொத்துக்களின் விற்பனையிலிருந்து வரும் வட்டி இலாபங்கள், தொழில் நுட்ப சேவைகள் போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படும் வரி?

a) செல்வ வரி

b) உற்பத்தி வரி

c) சொத்து வரி

d) நிறுவன வரி

29) தனது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரி எது?

a) செல்வ வரி

b) உற்பத்தி வரி

c) சொத்து வரி

d) நிறுவன வரி

30) கீழ்க்கண்டவற்றுள் மறைமுக வரிகளுக்கு எடுத்துக்காட்டு எது?

i ) முத்திரைத் தாள் வரி

ii ) பொழுதுபோக்கு வரி

iii) சுங்கத் தீர்வை

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) iii ) மட்டும்

31) அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரி எது?

a) பண்டங்கள் மற்றும் பணிகள் (GST) மீதான வரிகள்

b) சுங்கத் தீர்வை

c) பொழுதுபோக்கு வரி

d) முத்திரைத் தாள் வரி

32) பொழுதுபோக்கு வரி கீழ்க்கண்டவற்றுள் எவற்றுக்கு விதிக்கப்படுகிறது?

i ) கண்காட்சிகள்

ii ) விளையாட்டு அரங்கம்

iii ) விளையாட்டு நிகழ்ச்சிகள்

iv ) பொழுது போக்கு பூங்காக்கள்

a) i ), ii ), iii ), iv )

b) i ), ii ), iii )

c) ii ), iii )

d) iii ), iv )

33) உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்திப் பொருட்களின் மீதும் விதிக்கப்படும் வரி எது?

a) நிறுவன வரி

b) செல்வ வரி

c) சுங்கத்தீர்வை

d) ஏற்றுமதி வரி

34) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி இந்தியப் பாராளுமன்றத்தில் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

a) மார்ச் 29, 2017

b) ஜூலை 1, 2017

c) ஜூலை 1, 2016

d) மார்ச் 29, 2018

35) கீழ்க்கண்டவற்றுள் பலமுனை வரி எது?

a) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி

b) மதிப்புக்கூட்டு வரி

c) முத்திரைத்தாள் வரி

d) ஏற்றுமதி வரி

36) வருமானம் அதிகரிக்கும் போது, வரி விகிதமும் அதிகரித்தால் அவ்வரி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a) வளர்வீத வரி

b) ஆடம்பர வரி

c) விகிதாச்சார வரி

d) ஏற்றுமதி வரி

37) மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி கீழ்க்கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது?

i ) சேவை வரி

ii ) ஆடம்பர வரி

iii ) பரிசுச்சீட்டு வரி

iv ) மதிப்புக் கூட்டு வரி

a) i ), ii ), iii ), iv )

b) ii ), iii ), iv )

c) ii ), iii )

d) iii ), iv )

38) மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி கீழ்க்கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது?

i ) சேவை வரி

ii ) ஈடுசெய்வரி

iii ) கல்வி கட்டணம்

iv ) மதிப்புக் கூட்டு வரி

a) i ), ii ), iii ), iv )

b) ii ), iii ), iv )

c) ii ), iii )

d) iii ), iv )

39) எத்தனை முக்கிய GST விகிதங்கள் உள்ளன?

a) நான்கு

b) மூன்று

c) ஆறு

d) ஐந்து

40) ஒரு நிலையான அளவில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் வரி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a) வளர்வீத வரி

b) ஆடம்பர வரி

c) விகிதாச்சார வரி

d) ஏற்றுமதி வரி

41) அதிக வருமானம் ஈட்டுபவர்களை விட, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களிடம் அதிகவரி விகிதம் விதிப்பதைக் குறிப்பது எது?

a) வளர்வீத வரி

b) ஆடம்பர வரி

c) விகிதாச்சார வரி

d) ஏற்றுமதி வரி

42) வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a) வரி ஏய்ப்பு

b) வெள்ளை பணம்

c) கருப்பு பணம்

d) செல்வம்

43) இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு மூலகாரணமாக உள்ளது எது?

a) வரி ஏய்ப்பு

b) வெள்ளை பணம்

c) கருப்பு பணம்

d) செல்வப்பதுக்கல்

44) பின்வரும் எக்காரணத்தினால் கருப்பு பணம் உருவாகிறது?

i ) கட்டுப்பாட்டு அனுமதி

ii ) ஒதுக்கீடு

iii ) உரிமங்களின் அமைப்பு

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) iii ), iv )

45) கருப்பு பணம் தோன்றுவதற்கு மிக முக்கியமான பங்கு வகிப்பது எது?

a) தொழில் துறை

b) விவசாயம்

c) சுரங்கம்

d) பணிகள் துறை

46) கருப்பு பணம் (வெளியிடப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்துக்கள்) மற்றும் வரி விதித்தல் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

a) 2015

b) 2016

c) 2012

d) 2018

47) பனாமாவில் சமீபத்திய காகித கசிவுகளின் வெளிப்பாடுகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு பின்வருவனவற்றுள் எதனை உள்ளடக்கியது?

i ) அமலாக்க இயக்குநரகம் ED

ii ) நிதி புலனாய்வு பிரிவு

iii ) இந்திய ரிசர்வ் வங்கி

iv ) மத்திய நேரடி வரி வாரியம்

a) i ), ii ), iii ), iv )

b) i ), ii ), iii )

c) ii ), iii )

d) iii ), iv )

48) சுத்தமான பணச்செயல்பாடு" (Operation of Money) எப்போது தொடங்கியது?

a) ஜனவரி 31, 2017

b) ஜனவரி 21, 2018

c) ஜனவரி 30, 2016

d) ஜனவரி 31, 2015

49) ரியல் எஸ்டேட் (ஒழுங்கு முறை மற்றும் மேம்பாடு) சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

a) 2017

b) 2018

c) 2016

d) 2015

50) கருப்பு பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய ஆதாரமாகும்

a) கடத்தல்

b) பதுக்கல்

c) நிதி

d) சொத்துகுவிப்பு

51) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) தனி நபர்கள் அல்லாமல் நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு எனப்படும்.

ii ) வரி ஏய்ப்பு பெரும்பாலும் வரி செலுத்துவோர் தங்கள் வரி பொறுப்பைக் குறைக்க வரி அதிகாரிகளிடம் தங்களின் உண்மையான விவகாரங்களை வேண்டுமென்றே தவறாக சித்தரிப்பதை உட்படுத்துகிறது.

iii ), குறைந்த வருமானம், இலாபங்கள் அல்லது ஆதாயங்களை உண்மையில் சம்பாதித்த தொகையை விட அறிவித்தல் அல்லது விலக்குகளை மிகைப்படுத்துதல் போன்ற நேர்மையற்ற வரி அறிக்கையையும் உள்ளடக்கியது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

52) கீழ்க்கண்டவற்றுள் முறைசாரா பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஒரு செயல் எது?

a) வரி ஏய்ப்பு

b) நிதித்திறன்

c) ஆடம்பரம்

d) முதலீடு

53) கீழ்க்கண்டவற்றுள் வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவை எவை?

i ) வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்

ii ) மறைக்கப்பட்ட பணம்

iii ) விலக்குகள் அல்லது செலவுகளை உயர்த்துவது

iv ) கடல் கடந்த கணக்குகளில் விவரங்களை மறைத்தல்

a) i ), ii ), iii ), iv )

b) i ), ii ), iii )

c) ii ), iii )

d) iii ), iv )

54) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) கருப்பு பணத்தின் விளைவாக வரி ஏய்ப்பு மத்திய அரசின் வரி திரட்டல் முயற்சிகளைத் தடுக்கிறது

ii ) நிதிப் பற்றாக்குறை வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்துவதை சிதைக்கிறது

iii ) பொதுச் செலவுகள் தவிர்க்க முடியாததாக இருந்தால், பற்றாக்குறை நிதியுதவியை நாடும்படி அரசாங்கத்தை கட்டாயப்படுத்துகிறது

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

55) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) வரி ஏய்ப்பு, வரி அமைப்பின் சமத்துவப் பண்புகளை குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது

ii ) நேர்மையான வரி செலுத்துவோர் விகிதாசார வரிச்சுமையை விருப்பத்துடன் சுமக்கிறார்கள்

iii ) அவர்களை மனச் சோர்வடையச் செய்து வரி ஏய்ப்பு செய்பவர்களின் முகாமில் சேர ஈர்க்கப்படுகிறார்கள்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) iii ), i ),

56) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) வரி ஏய்ப்பு மற்றும் கருப்பு பணம் ஆகியவை நாட்டில் தகுதியற்ற குழுக்களின் கைகளில் பொருளாதார சக்தியைக் குவிப்பதை ஊக்குவிக்கின்றன.

ii ) இது பொருளாதாரத்தை அதன் வழியில் அச்சுறுத்துதலாகும்.

iii ) வரிஏய்ப்பு, வரி நிர்வாகத்தின் நேரத்தினையும், சக்தியினையும் பயன்படுத்தி, வரிஏமாற்றுக்காரர்களின் சிக்கலான கையாளுதல்களைத் தடுக்கிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) iii ), i )

57) வரி ஏய்ப்பு அபாரதங்களில் எத்தனை ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அதிக அளவு அபராதமும் அடங்கும்?

a) ஐந்து

b) இரண்டு

c) நான்கு

d) மூன்று

58) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) பிரதிவாதிகள், வழக்கு விசாரணைக்கான செலவுகளைச் செலுத்த உத்தரவிடப்படலாம்.

ii ) பிற வரி ஏய்ப்பு அபாரதங்களில் சமூக சேவை, நன்னடத்தை மற்றும் வழக்கின் சூழ்நிலைகளைப் பொறுத்து மறுசீரமைத்தல் ஆகியவை அடங்கும்.

iii ) வரி ஏய்ப்பு அபராதம், குற்றத்தின் தன்மை, மற்றும் அதன் தீவிரத்தினைப் பொறுத்து கடுமையானதாக இருக்கும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) iii ), i )

59) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) வரி என்பது வரி செலுத்துவோர் நேரடி வருவாய் அல்லது நன்மை என்று எதையும் எதிர்பாராமல் அரசாங்கத்திற்குக் கட்டாயமாக செலுத்திடும் கட்டணமேயாகும்.

ii ) பொது நிறுவனங்களின் பொருட்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி மற்றும் பங்கீடு செய்தல் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானம், நிர்வாக நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட வருவாய் ஆகியவை கட்டணங்களில் அடங்காது.

iii ) வரி வருமானம் தவிர்த்து, வரி அல்லாத மூலங்களிலிருந்து பெறக்கூடியவை கட்டணங்கள் ஆகும்

iv ) சில செலுத்துதல்கள், கட்டணங்கள் (Fees), அபராதங்கள், தண்டனைகள் மற்றும் பறிமுதல்கள் ஆகும்.

a) i ), ii ), iii ), iv )

b) i ), iii ), iv )

c) ii ), iii )

d) iii ), iv )

60) கீழ்க்கண்டவற்றுள் எது மறைமுக வரி?

a) ஆயத்தீர்வை

b) தனிநபர் வருமானவரி

c) நிறுவனவரி

d) கட்டணங்கள்

61) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) வரியின் மூலம் சமத்துவமுறையை உருவாக்கலாம்.

ii ) குறிப்பாக, நேர்முக வரியில் வளர்வீத வரி முறை பின்பற்றப்படுகிறது.

iii ) அதேபோல சில மறைமுக வரியான ஆடம்பரப்பண்டங்களின் மீது விதிக்கப்படும் வரி வளர்வீத வரியின் தன்மையுடையதாகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) iii ), i )

62) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) அந்நியச் செலாவணி வரிவிதிப்பு ஏற்றுமதியை ஊக்குவிப்பதுடன் இறக்குமதியைத் தடுக்கிறது

ii ) பொதுவாக, வளரும் நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளும் ஏற்றுமதி பொருட்களுக்கு வரிகளை விதிப்பதில்லை.

a) i ), ii ) சரி

b) i ) மட்டும்

c) ii ) மட்டும்

d) i ), ii ) தவறு

63) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) வரி என்பது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது.

ii ) அரசாங்கம் பண்டங்கள் மீதான வரி விகிதத்தை குறைப்பதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

a) i ), ii ) சரி

b) i ) மட்டும்

c) ii ) மட்டும்

d) i ), ii )தவறு

64) கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?

i ) வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அரசாங்கத்திற்கு கட்டாயமாக செலுத்துகின்ற செலுத்துகையாகும்.

ii ) வரி என்பது ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச் சலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொது நல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும்.

iii ) ஒரு தனிப்பட்ட நபரின் மீது வரி விதிக்கப்பட்டால், அதனை அவர் செலுத்த வேண்டும். இல்லையெனில் அவர் தண்டிக்கப்படுவார்.

a) i ), ii ) தவறு

b) i ) மட்டும்

c) ii ) மட்டும்

d) இரண்டுமில்லை

65) கீழ்க்கண்டவற்றுள் விகித வரி விதிப்புக்கு எடுத்துக்காட்டு எது?

a) நிறுவன வரி

b) வருமான வரி

c) விற்பனை வரி

d) முத்திரைத்தாள் வரி

66) வரவு செலவு திட்டம் 2019 – 2020 இன் படி அதிக வரவு கொண்ட துறை எது?

a) வருமான வரி

b) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி

c) சுங்க வரி

d) மத்திய கலால் வரி

67) வரவு செலவு திட்டம் 2019 – 2020 இன் படி அதிக அரசு செலவினம் எது?

a) வட்டி செலுத்துதல்

b) மானியங்கள்

c) பாதுகாப்பு

d) மாநில பங்கின் வரி மற்றும் கடமைகள்

winmeen.com